# யூன் – 14 – வெள்ளி

### தூய ஜான், மெத்தாடியுஸ்

### “உங்கள் வலக்கண் உங்களை பாவத்தில் விழச்செய்தால் அதைப் பிடுங்கி எறிந்து விடுங்கள்”

---------------------------------------------------------------------

## முதல் வாசகம் : 2 கொரிந்தியர் 4 : 7 –15

சகோதரர், சகோதரிகளே! இந்தச் செல்வத்தை மண்பாண்டங்கள் போன்ற நாங்கள் கொண்டிருக்கிறோம். இந்த ஈடு இணையற்ற வல்லமை எங்களிடமிருந்து வரவில்லை, அது கடவுளுக்குகே உரியது என்பது இதிலிருந்து விளங்குகிறது.நாங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் இன்னலுற்றாலும் மனம் உடைந்து போவதில்லை. குழப்பமுற்றாலும் நம்பிக்கை இழப்பதில்லை. துன்புறுத்தப்பட்டாலும் கைவிடப்படுவதில்லை. வீழ்த்தப்பட்டாலும் அழிந்துபோவதில்லை.இயேசுவின் வாழ்வே எங்கள் உடலில் வெளிப்படுமாறு நாங்கள் எங்கு சென்றாலும் அவருடைய சாவுக்குரிய துன்பங்களை எங்கள் உடலில் சுமந்து செல்கிறோம்.இயேசுவின் வாழ்வு சாவுக்குரிய எங்கள் உடலில் வெளிப்படுமாறு உயிரோடிருக்கும்போதே நாங்கள் அவரை முன்னிட்டு எந்நேரமும் சாவின் வாயிலில் நின்று கொண்டிருக்கிறோம்.சாவின் ஆற்றல் எங்களிலும் வாழ்வின் ஆற்றல் உங்களிலும் வெளிப்படுகிறது.”நான் கடவுள்மீது நம்பிக்கையோடு இருந்தேன் ஆகவே பேசினேன்” என்று மறைநூலில் எழுதியுள்ளது. அதற்கொப்ப நம்பிக்கை மனப்பான்மை கொண்டுள்ள நாங்களும் நம்புகிறோம் ஆகவே பேசுகிறோம்.ஆண்டவர் இயேசுவை உயிர்த்தெழச் செய்த கடவுளே எங்களையும் அவரோடு உயிர்த்தெழச் செய்து அவர் திருமுன் நிறுத்துவார் உங்களையும் அவ்வாறே நிறுத்துவார் என்பது எங்களுக்குத் தெரியும். இவையனைத்தும் உங்கள் நன்மைக்கே நிகழ்கின்றன. இறையருள் பெறுவோரின் தொகை பெருகப்பெருக அவர்கள் கடவுளுக்குச் செலுத்தும் நன்றியும் பெருகும். இதனால் கடவுள் போற்றிப் புகழப்படுவார்.

**பதில்பாடல்:** ஆண்டவரே நான் உமக்கு நன்றிப்பலி செலுத்துவேன்.

## நற்செய்தி : மத்தேயு 5 : 27 - 32

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது : “விபசாரம் செய்யாதே“ எனக் கூறப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். ஆனால், நான் உங்களுக்குச் சொல்கிறேன் ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்கும் எவரும் தம் உள்ளத்தால் ஏற்கெனவே அப்பெண்ணோடு விபசாரம் செய்தாயிற்று. உங்கள் வலக்கண் உங்களைப் பாவத்தில் விழச்செய்தால் அதைப் பிடுங்கி எறிந்துவிடுங்கள். உங்கள் உடல் முழுவதும் நரகத்தில் எறியப்படுவதைவிட உங்கள் உறுப்புகளில் ஒன்றை நீங்கள் இழப்பதே நல்லது.உங்கள் வலக்கை உங்களைப் பாவத்தில் விழச் செய்தால் அதையும் உங்களிடமிருந்து வெட்டி எறிந்துவிடுங்கள். உங்கள் உடல் முழுவதும் நரகத்திற்குச் செல்வதைவிட உங்கள் உறுப்புகளில் ஒன்றை நீங்கள் இழப்பதே நல்லது.”தன் மனைவியை விலக்கி விடுகிறவன் எவனும் மணவிலக்குச் சான்றிதழைக் கொடுக்கட்டும்” எனக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் எவரும் தம் மனைவியைப் பரத்தைமைக்காக அன்றி வேறு எந்தக் காரணத்திற்காகவும் விலக்கிவிடக் கூடாது. அப்படிச் செய்வோர் எவரும் அவரை விபசாரத்தில் ஈடுபடச் செய்கின்றனர். விலக்கப்பட்டோரை மணப்போரும் விபச்சாரம் செய்கின்றனர் “என்றார்.

**தியானம்:** முதல் வாசகத்தில் திருத்தூதர் பவுலின் இதயத்தில் கிறிஸ்துவின் அறிவொளி வீசியதை நாம் காண்கிறோம். அங்கே பவுல் தான் போதிக்கும் நற்செய்தி உண்மையான செல்வம் எனவும், மண்பாத்திரமான நான் அதைக் கொண்டிருப்பதாகவும் கூறுகிறார். குறிப்பாக மனித பெலவீனங்களுக்கு மத்தியிலும் கிறிஸ்துவக்காக தான் எதையும் துணிவோடு செய்ததாக கூறுகிறார். வேதனை, மனக்கலக்கம், துன்பம் எதுவாக இருந்தாலும் தளர்ந்து போவதில்லை. ஏனெனில் திருத்தூதர்கள் தமது சொந்த அனுபவத்தில் கடவுளின் அன்பையும், வல்லமையையும் பெற்றிருக்கிறார்கள். அவ்வாறே நாமும் நமது விசுவாசத்தின் அடிப்படையில் இறைவார்த்தையை அடித்தளமாகக் கொண்டு, நற்கருணையில் ஊட்டம் பெற்று நமது சுயத்திற்கும், மாமிச இச்சைக்கும் மரித்தவர்களாக இருக்க வேண்டும். அப்போதுதான் இயேசுவின் உயிர்த்தெழுதல் நம்மத்தில் பிரதிபலிக்கும். இந்த சக்தியும், ஆற்றலுமே நற்செய்தியில் “கண்ணைப் பிடுங்கு, கையை வெட்டு’’ என்பதாகும். குறிப்பாக சொன்னால் அன்பை அழித்துவிடக் கூடிய எல்லாவற்றையும் அழித்துவிட வேண்டும் இது இயேசுவின் விருப்பம்.